தூத்துக்குடியில் உப்பு சம்பந்தப்பட்ட தொழில்கள் துவங்கும் திட்டம்.

* வினா எண் 1026 திரு. பி. ஈஸ்வரமுர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் உப்பு சம்பந்தப்பட்ட தொழில்கள் துவங்க தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) & (ஆ): உப்பை மூலப்பொருளாகக் கொண்டு 66,000 டன்கள் சோடா ஆஷ் மற்றும் 66,000 டன்கள் அம்மோனியம் உற்பத்தி செய்யக்கூடிய ஏறக்குறைய 40 கோடி ரூபாய் முதலீட்டில் ஏறக்குறைய 500 பேர்களுக்கு நேரடியாகவும் ஆயிரம் பேர்களுக்கு மறைமுகமாகவும் வேலை கொடுக்கிற வகையில் தமிழ்நாடு ஆல்கலி கெமிக்கல்ஸ் அண்ட் பெர்டிலைசர்ஸ் நிறுவனம் டிட்கோவினுடைய கூட்டுத்துறை நிறுவனமாக 1982-ல் உற்பத்தியைத் துவக்க இருக்கின்றது. அதற்கான தொழிற்சாலைகளுக்கான கட்டுமான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் தூத்துக்குடி பகுதியில் 1,350 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தும் வேலை அதாவது லேண்ட் அக்விசிஷன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியிலே மெரைன் மற்றும் சால்ட் பேஸ்ட் இன்ஜினியரிங் இன்டஸ்ட்ரீஸ் துவங்குவதற்கு அந்த 1,350 ஏக்கர் நிலப்பரப்பும் பயன்படுத்தப்படும்.

[முற்பகல் 10—00]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. பி. ஈஸ்வரமுர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, விரிவான பதில் அளிக்கப்பட்டுவிட்டது. ஆனால் நான் கேட்க விரும்புவது ஒரு வருடத்திலே அங்கே எவ்வளவு மொத்த உற்பத்தி செய்ய முடியும் என்பதுதான்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, டிட்கோ நிறுவனத்தின் சார்பிலே கூட்டுத்துறையிலே ஆரம்பிக்கப்பட இருக்கின்ற அந்த நிறுவனத்தின் உற்பத்திபற்றி ஏற்கனவே சொன்னேன். அங்கே 66,000 டன் சோடா ஆஷ் மற்றும் 66,000 டன் அம்மோனியம் தயாரிக்கப்படும், அந்த அளவுக்கு அந்தத் தூத்துக்குடி கெமிக்கல்ஸ் நிறுவனத்தினுடைய உற்பத்தி இருக்கும். 1,350 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்யும் பணி தற்போது நடந்து வருகின்றது. அதற்குத் தொழில் துவங்குவதற்குரிய பணிகள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு உற்பத்தி ஆரம்பிக்கப்படும்.